*விரைவிலே அதைப்பற்றி முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 8 இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை உள்ள மாநகராட்சியிலே 75 வார்டுகள் இருக்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதன்படி சேலம் மாநகராட்சியிலே 75 வார்டுகள் உள்ள அளவிலே மறுவரையறை சீரமைப்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும். ஆனால், இந்தக் கணக்குப்படி வருமென்றால் ஆவன செய்யப்படும். அப்படி கணக்குப்படி இல்லாமல், குறைவாக இருந்தால் 69 வார்டுகள் என்று வரும்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு, 2021

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

*2021 ஆகஸ்ட் 31*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

*__திரு. கே.பி. அன்பழகன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த அரசினர் சட்டமுன்வடிவிற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பதிவு செய்யப்படுகிறது.*

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*
*(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று கோஷமிட்டனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதாவது நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்தீர்கள். அதை நான் பதிவு செய்துள்ளேன். இனி அந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுக்கும்போது, உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுக்கும்போது உங்கள் கருத்துக்களை முழுமையாகச் சொல்லுங்கள். எதிர்ப்பைப் பதிவு செய்தாகிவிட்டது. உங்களுக்குத் தெரியாததா? நாங்களா உங்களுக்கு சொல்லித் தரவேண்டும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்கிறேன் என்று சொல்லியுள்ளார்; அதைப் பதிவு*

செய்தாகிவிட்டது. அதற்குப் பின்னர் கடைசியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். அப்பொழுது விரிவாகச் சொல்லுங்கள், நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்; நான் வாய்ப்புத் தந்துவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்டமுன்வடிவை நாங்கள் ஆரம்ப நிலையிலே முழுமையாக எதிர்க்கிறோம். ஏனென்று சொன்னால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டுவிட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கடந்த 10 ஆண்டுக் காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய சேவைகள். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பெயரை நாங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தை முழுமையாகப் பதிவு செய்துகொள்கிறோம். பதிவு செய்தாகிவிட்டது. இப்பொழுது இந்தத் தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. தீர்மானம் நிறைவேறி, அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். கடைசியாக இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுக்கும்போது நீங்கள் விரிவாகப் பேசுங்கள். மானியக் கோரிக்கை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர். . . (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதையும் கேளுங்கள். உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்,

இந்த அவையில் அவை முன்னவராக இருந்தவர். எப்பொழுதுமே ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறபொழுது, அந்தந்த அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துகளைச் சொல்லலாம்.

இவர் அவை முன்னவராக இருந்தபோதும்கூட, இப்படித்தான் "இச்சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறோம்" என்றுதான் எங்கள் கருத்துகள் பதிவு செய்யப்படும். சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போதுதான், அந்த இயக்கத்தினுடைய, கொள்கைகளையெல்லாம் எடுத்துச் சொல்ல முடியுமே தவிர, சட்டமுன்வடிவின் அறிமுக நிலையிலேயே தங்கள் கருத்துகளையெல்லாம் சொல்ல முடியாது. இதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக இருந்திருக்கிறீர்கள். நீங்களும் அவை முன்னவராக இருந்திருக்கிறீர்கள். எந்தளவிற்கு எங்களைப் பேச நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. அப்படிக் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் உங்கள் கருத்தை சட்டமுன்வடிவின் ஆரம்ப நிலையிலெல்லாம் சொல்ல முடியாது; ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் சார்பில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** One minute, உங்களுக்காகப் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்த்துவிட்டார்கள். ஆகையினால், they are not

[திரு. துரைமுருகன்] [2021 ஆகஸ்ட் 31

ready for discussion. இந்தச் சட்டமுன்வடிவை அவர்கள் அறிமுக நிலையிலேயே எதிர்த்துவிட்டதால், அவர்கள் அவையில் இருக்க வாய்ப்பு இல்லை; வெளிநடப்புத்தான் செய்வார்கள். அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்; அவர்கள் வெளியேறுவார்கள். நீங்கள் அதற்காக அவர்களை நிறுத்தி வைத்துக் கொண்டிருக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்திற்கு எதிராக, நீங்கள் அவையில் இருங்கள். அவ்வளவுதானே! அவர்கள் சொன்ன கருத்துக்கு மாற்றி செயல்படுங்கள். உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் எதிர்த்துவிட்டார்கள்; கருத்து பதிவு செய்யப்பட்டுவிட்டது. அச்சட்டமுன்வடிவை பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது, நீங்கள் உங்கள் கருத்துகளைச் சொல்லலாம். இதுதான் மரபு, அதுதான் நடைமுறை. (குறுக்கீடு) அதைத்தான் நாங்கள் ஒப்புக்கொண்டுவிட்டோமே! பதிவு செய்துவிட்டோமே! அடுத்த அலுவலுக்கும் சென்றுவிட்டேன். (குறுக்கீடு) இச்சட்டமுன்வடிவை பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது, நீங்கள் உங்கள் கருத்துகளை முழுமையாகப் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமருங்கள். நான் அடுத்த அலுவலுக்குச் சென்றுவிட்டேன். உங்களுக்கு அனைத்து வாய்ப்புகளையும் நான் தருகிறேன். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற எந்த பேதமும் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களிடம் சொல்கிறேன், ஒரு சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தும்போது, அதை ஆரம்ப நிலையிலேயே எதிர்த்திருக்கிறீர்கள்; உங்கள் கருத்து பதிவு செய்யப்பட்டுவிட்டது. அந்த அலுவல் முடிந்து, அடுத்த அலுவலுக்கும் சென்றாகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, உங்கள் கருத்துக்களை ஆய்வு நிலையில் சொல்லுங்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) இச்சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள், யாரும் எதைக் கூறினாலும் அது அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— *தொடர்ச்சி*

## தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு, 2021— *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், கையை உயர்த்துகிறீர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக அரசினர் சட்டமுன்வடிவை பாரதிய ஜனதா கட்சி ஆதரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆதரிக்கிறீர்களா?*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *ஆதரிக்கவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆதரிக்கவில்லை.* right

---

*@ 321 முதல் 475 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.*